# Ethnographic Elements in the Novel 'Sengeni'

**E. Hemavathi**
*Ph.D. Research Scholar*
*Subramania Bharathi School Tamil Language and Literature*
*Pondicherry University, Puducherry*

**Dr. V. Dhanalakshmi**
*Associate Professor*
*Subramania Bharathi School Tamil Language and Literature*
*Pondicherry University, Puducherry*

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: அக்டோபர்

வருடம்: 2025

**P-ISSN: 2454-3993**

**E-ISSN: 2582-2810**

**DOI:** https://doi.org/10.5281/zenodo.17255944

**Abstract**
*In the context of Tamil literature, studies that integrate knowledge from other disciplines have been increasing in recent times. Among these, research related to Ethnography, a subfield of Anthropology, holds significant importance. Specifically, studies conducted on fictional literature created by writers, known as "Literary anthropology" or "Literary ethnography", help to highlight the gap between the literary work and society. The novel Sengeni (2021) by P. Amirthavalli, which is centered around the Neithal (Coastal) landscape, describes the life of a particular ethnic community. By identifying the ethnographic elements present in this novel, it is possible to reveal the unique characteristics found in the lives of these people. Therefore, this paper has been written based on this objective.*
***Keywords:*** *Neithal, Fisherfolk, Lifestyle, Ethnographic Elements*

**References**

1. Amirthavalli, P., Sengeni, Murankalari Padaippagam, Manali, Chennai, 2021.
2. Chandrakumar, Ra. (Chief Editor), Ezhumalai, Su. (Editor), Dictionary of Tamil Nadu Fishermen's Occupation and Culture, Central Institute of Classical Tamil, Chennai, 2023.
3. Sivasubramaniam, A., Ethnography and Tamil Novel, New Century Book House, Ambattur, Chennai, 2019.
4. Dhananjayan, A., Literary Anthropology in Tamil, International Institute of Tamil Studies, Chennai, 2014.
5. Bhaktavatsala Bharathi, Literary Anthropology, Adaiyalam, Pudukkottai, Tiruchirappalli, 2014.
6. Paramasivam, Aru., Paratham, Ethnography of the Parathavar Community, Kavya, Chennai, 2014.
7. Berlin Kurumbanai, C., Neithal Dictionary, New Century Book House, Ambattur, Chennai, 2020.
8. Berlin Kurumbanai, C., Coastal Dictionary, New Century Book House, Ambattur, Chennai, 2024.

# செங்கேணி நாவலில் வெளிப்படும் இனவரைவியல் கூறுகள்

*எ. ஹேமாவதி*
முனைவர் பட்ட ஆய்வாளர்
சுப்பிரமணிய பாரதியார் தமிழ்மொழி மற்றும் இலக்கியப்புலம்
புதுவைப் பல்கலைக்கழகம், புதுச்சேரி

*முனைவர் வ. தனலட்சுமி*
இணைப் பேராசிரியர்
சுப்பிரமணிய பாரதியார் தமிழ்மொழி மற்றும் இலக்கியப்புலம்
புதுவைப் பல்கலைக்கழகம், புதுச்சேரி

***ஆய்வுச் சுருக்கம்***
*தமிழ் இலக்கியச் சூழலில் பிற துறைசார்ந்த அறிவுப் புலத்தை இணைத்து மேற்கொள்ளப்படும் ஆய்வுகள் சமீபக் காலங்களில் பெருகிவருகின்றன. அந்தவகையில், மானிடவியல் (Anthropology) துறையின் உட்பிரிவான இனவரைவியல் (Ethnography) சார்ந்த ஆய்வுகள் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளன. அதிலும் குறிப்பாக, எழுத்தாளர்கள் படைக்கின்ற புனைவிலக்கியங்களில் மேற்கொள்ளப்படும் இத்தகைய ஆய்வுகள், 'இலக்கிய மானிடவியல்', 'இலக்கிய இனவரைவியல்' என்கிற நிலையில் படைப்புக்கும் சமூகத்திற்குமான இடைவெளியை உணர்த்தும் வகையில் நிகழ்த்தப்பெறுகின்றன. நெய்தல் நிலத்தை மையமிட்டு எழுதப்பட்டுள்ள ப. அமிர்தவள்ளியின் 'செங்கேணி' (2021) எனும் நாவல் ஒரு குறிப்பிட்ட இன மக்களின் வாழ்வியலை மையமிட்டு விவரிப்பதாக அமைந்துள்ளது. இந்நாவலில் காணலாகும் இனவரைவியல் கூறுகளை இனங்காண்பதன் மூலம், அம்மக்களின் வாழ்வியலில் காணப்படும் தனித்துவமான அடையாளங்களை வெளிக்கொணர இயலும். எனவே, இக்கட்டுரையானது இந்த நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது.*
***திறவுச் சொற்கள்:*** *நெய்தல், மீனவர், வாழ்வியல், இனவரைவியல் கூறுகள்*

**முன்னுரை**

சங்க இலக்கியங்கள் தொடங்கி, நவீன இலக்கியங்கள் வரை ஐவகை நிலங்களில் ஒன்றான, கடலும் மணலும் சேர்ந்த நெய்தல் நிலத்தின் வாழ்வியலானது பதிவு செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக, நவீன இலக்கிய வகைகளுள் நாவல் வடிவங்களில் இது குறித்து சமகாலத்தில் பெரிதும் பேசப்படுகின்றன. தமிழ் உரைநடையின் வளர்ச்சியுடன், நாவல் வடிவம் சமூகத்தைப் பிரதிபலித்துக் காட்டுவதாக அமைகிறது. படைப்பாளர்கள் தங்களின் பரந்துபட்ட பார்வைகளைப் பதிவு செய்ய நாவல் வடிவத்தைக் கருவியாகப் பயன்படுத்துகின்றனர். இந்நிலையில், ஆண் நாவலாசிரியர்களே தமிழில் மிகுதியாக உள்ளனர் என்பதையும் குறிப்பிட்டாகவேண்டும்.தற்போதுவரையிலும், பெண் நாவலாசிரியர்கள் விரல்விட்டு எண்ணுமளவிற்கே தென்படுகின்றனர். அதிலும், நெய்தல் திணை சார்ந்து எழுதுபவர்கள் மிகவும் குறைவு. அவ்வகையில், ராஜம்கிருஷ்ணன், சு. தமிழ்ச்செல்வி போன்றோர் வரிசையில் இடம்பெறுகிறார், ப.அமிர்தவள்ளி. **2021**ஆம் ஆண்டு முரண்களரி படைப்பகத்தின் மூலம் இவரின் முதல் நாவலான "செங்கேணி" வெளியானது. இந்நாவலுக்குத் தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித்துறை சிறந்த நாவலிற்கான

விருது (2021) வழங்கப்பட்டுள்ளமைக் குறிப்பிடத்தக்கது. "செங்கேணி" நாவல், புதுச்சேரி வட்டாரப் பரதவ (மீனவ) மக்களின் வாழ்வியலை மையமாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது. ஒரு குறிப்பிட்ட இன மக்களின் வாழ்வியல் கூறுகளை விவரிக்கும் விதமாக அமைந்துள்ளதால், இதனை இனவரைவியல் நாவலாகக் கருதலாம். எனவே, புதுச்சேரி வட்டார நெய்தல் நில மக்களின் வாழ்வியலைப் பதிவு செய்துள்ள இந்த நாவலில் காணப்படும் இனவரைவியல் கூறுகளை எடுத்தாராய முற்படுகிறது, இக்கட்டுரை.

## இனவரைவியல் குறித்த அறிஞர்களின் விளக்கங்கள்

மானிடவியல் துறையின் பிரிவுகளில் "இனவரைவியல்" (Ethnography) முக்கியத்துவம் வாய்ந்த இடத்தைப் பெறுகிறது. அவ்வகையில், "இனவரைவியல்" என்பதற்கான அறிஞர்களின் விளக்கங்களை முதற்கண் இங்கு காண்போம்.

இனவரைவியல் என்பது ஒரு தனிப்பட்ட இனக்குழு அல்லது சமூகத்தைப் பற்றிய வரைவு எனும் பொருளைத் தருகிறது. இன்னொரு வகையில் சொல்வதானால் ஓர் இனக்குழுவைப் பற்றிய முறையான, முழுமையான, விளக்கமான படிப்பு என்றும் கூறலாம். (இலக்கிய மானிடவியல், ப.7) என்கிறார் மானிடவியல் அறிஞர் பக்தவத்சலபாரதி. இக்கூற்றின்படி, ஒரு தனித்த மக்கள் குழுவின் ஒட்டுமொத்த வாழ்க்கையையும் உள்வாங்கிக் கொண்டு அதனை விளக்கிச் சொல்வது இனவரைவியலின் அடிப்படை நோக்கமாக விளங்குகிறது. "தமிழில் இலக்கிய மானிடவியல்" என்னும் நூலில் ஆ.தனஞ்செயன், குறிப்பிட்ட மக்கள் கூட்டத்தினரின் சமூக - பண்பாட்டு வாழ்க்கை முறையை ஒருவகைத் திட்டவட்டமான முனைப்புடன் களப்பணியின் மூலம் உற்றுநோக்கித் திரட்டும் தரவுகளைக் கொண்டு ஓர் ஆய்வாளன் படைக்கும் பண்பாட்டுச் சித்திரிப்பாக அமையும் ஒரு தனி வரைவு நூலே இனவரைவியல் (தமிழில் இலக்கிய மானிடவியல், ப.10)

என்ற குறிப்பினை அளிக்கிறார். இவ்வரையறைகளின் மூலம் இவ்வுலகில் வாழும் பல்வேறு மானிடச் சமூகங்கள் ஒவ்வொன்றும் தனித்தன்மையான பழக்க வழக்கங்களையும் வாழ்வியல் முறைகளையும் கொண்டு விளங்குகின்றன என்பதை உணர்ந்து கொள்ள முடிகிறது. அவற்றை வெளிக்கொணர்வதே இனவரைவியலின் அடிப்படை நோக்கம் என்பதை அறியமுடிகிறது.

## இனவரைவியல் கூறுகள்

இனவரைவியல் ஆய்வினை மேற்கொள்ளும் போது, ஒரு தனிப்பட்ட மக்கள் குழுவிடமிருந்து அனைத்து விதமான வாழ்வியல் கூறுகளும் தரவுகளாகச் சேகரிக்க வேண்டியுள்ளது. இத்தகைய இனவரைவியல் ஆய்வுக்கான கூறுகளாக, நில அமைப்பு, சுற்றுச்சூழல், காலநிலை, பருவ காலங்கள், மழை வெப்பம், தாவரங்கள், விலங்குகள், வாழிடம், குடியிருப்பு முறை, பொருள்சார் பண்பாடு, குடும்ப அமைப்பு, திருமண முறை, உறைவிட முறை, வாழ்வியல் சடங்குகள், குழந்தை வளர்ப்பு முறை, மணக்கொடை, மணவிலக்கு, மறுமண முறைகள், பண்பாட்டுவயமாக்க முறை, உளவியற் பாங்குகள், வாழ்க்கைப் பொருளாதாரம், தொழிற்பகுப்பு முறை, உற்பத்தி முறை, நுகர்வு முறை, பங்கீட்டு முறை, பரிமாற்ற முறை, உணவு முறை, கைவினைத் தொழில்கள், அரசியல் முறைகள், அதிகார உறவுகள், சமூகக் கட்டுப்பாடு, மரபுசார் சட்டங்கள், சமய நம்பிக்கைகள், தெய்வ கணங்கள், சடங்குகள், வழிபாட்டு முறை, மந்திரம், சூனியம், விழாக்கள், இசை, விளையாட்டுகள், அழகியல் சிந்தனைகள், மருத்துவ முறை, ஆடை அணிகலன்கள், மரபுசார் அறிவு, உலகப் பார்வை, நாட்டார் வழக்காறு (இலக்கிய மானிடவியல், பக்.7-9)

போன்ற பல்வேறு தரவுகளைச் சேகரிக்க வேண்டும் என்கிறார், பக்தவத்சலபாரதி. "செங்கேணி" நாவலில் இடம்பெற்றுள்ள இனவரைவியல் கூறுகளை இங்கு அடையாளம் காண்பதற்கு முன், ஓர் இனவரைவியல் நாவலில் காணப்படும் செய்திகள் எவ்வாறு பெறப்படுகின்றன என்பது பற்றி ஆ.சிவசுப்பிரமணியன் தரும் விளக்கத் தினைக் காண்போம்.

ஒரு நாவலாசிரியன் இனவரைவியல் செய்திகளைச் சுய அனுபவம், கள ஆய்வு முறை, நூலறிவு என்ற மூன்று வழிமுறைகளில் தெரிந்துகொள்கிறான் இங்கு சுய அனுபவம் என்பது நாவலாசிரியன் தான் பிறந்து வளர்ந்த சமூகச் சூழலையோ, தான் வாழ்ந்து கொண்டிருக்கும் சமூகச் சூழலையோ, தான் மேற்கொண்டிருக்கும் தொழில் அடிப்படையில் பெறும் அனுபவங்களையோ மையமாகக் கொண்டு நாவல் எழுதுவதாகும் (இனவரைவியலும் தமிழ் நாவலும், ப.10)

அவ்வகையில், அமிர்தவள்ளியின் "செங்கேணி" நாவலானது, அவர் பிறந்து வளர்ந்து, வாழ்ந்து கொண்டிருக்கும் சமூகத்தைப் பற்றியதாக அமைந்துள்ளது. இது குறித்து அமிர்தவள்ளி, இந்த நாவலின் கதைப் பின்னலும் கதைக்களமும் நினைவு தெரிந்த நாள் முதலாகப் பார்த்து, பழகி வருகின்ற மனிதர்களை மையமாகக் கொண்டது. சிறுவயது முதல் நடந்து வருகின்ற நிகழ்வுகளை முன்னிறுத்தி என் மனம் கேட்ட கேள்விகளின் நிரல். இருபது ஆண்டு காலமாய் என்னைச் சுற்றிலும் நடக்கின்ற அவலங்கள். இத்தகைய அவலங்களுக்கெல்லாம் எது காரணம்? என்ற கேள்விக்கான விடையைத் தேடுகின்ற முயற்சியின் வெளிப்பாடே இந்நாவல் எழுதுவதற்கான தேவையாக இருந்தது (செங்கேணி, ப.6) என்று தன் முன்னுரையில் சுட்டிச் செல்கிறார். இதன்மூலம், "செங்கேணி' நாவல் உருவான பின்னணியை உணர்ந்துகொள்ள முடிகிறது.

**செங்கேணி நாவலின் கதைக்களமும் கருவும்**

நாவலில் முக்கியமான கதாபாத்திரமாக விளங்கும் "செங்கேணி"யின் பெயரையே இந்நாவலுக்குச் சூட்டியுள்ளார், நாவலாசிரியர். புதுச்சேரி வட்டாரப் பரதவ மக்களின் காவல் தெய்வமாகவும் "செங்கேணி" அம்மன் விளங்குவதை இங்கு குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். இந்நாவல் "பட்டணவர்" இன மக்களின் வாழ்வியலை மையமிட்டு எழுதப்பட்டுள்ளது. இவ்வினத்தைப் பற்றி, தமிழகத்தில் பட்டணவர் எனப்படுவோர் பாண்டிச்சேரிப் பகுதிகளில் 10 கிராமங்களிலும், கடற்கரையோரக் கிராமங்களில் செட்டியார் எனும் பெயரிலும், காரைக்கால் மேட்டுப் பகுதிகளில் குடிப்பிள்ளை எனும் பெயரிலும் வாழ்ந்து வருகின்றனர் (பரதவம், ப.48) எனும் அரு.பரமசிவம் என்பாரின் கூற்றுக் கருத்திற்கொள்ளத்தக்கது. இவ்விடத்தில், நாவலின் கதைப் போக்கை அறிந்து கொள்வது, இனவரைவியல் கூறுகளை இனங்காண உதவும்.

"காவியா" என்கிற கதாபாத்திரம் ஒட்டு மொத்தக் கதையை நகர்த்திச் செல்வதாக (கதைசொல்லி) இந்நாவல் அமைந்துள்ளது. நாவலின் மையப்பாத்திரமான செங்கேணி, தனக்கு விருப்பமில்லை என்றாலும், தன் அக்காவின் கணவர் புள்ளச்சாவடியார் விருப்பப்படி தன் தாய்மாமன் மகன் கார்த்தியைத் திருமணம் செய்துகொள்கிறாள். இருவருக்கும் ஒரு பெண் குழந்தை பிறக்கிறது. குழந்தையைப் பற்றியும் செங்கேணியைப் பற்றியும் எந்தக் கவலையும் கொள்ளாமல் தன் போக்கில் இருக்கிறான், கார்த்தி. இதற்கிடையில், இராசா என்பவரின் பாலியல் தொந்தரவினால், கார்த்தியுடன் நாகப்பட்டினத்திற்குச் செல்கிறாள். ஆனால் அவ்விடத்தில் கார்த்தி அவனை விட வயதில் மூத்த வேறொரு பெண்ணுடன் உறவு ஏற்பட்டு, செங்கேணியை விட்டுவிட்டுச் சென்றுவிடுகிறான். கார்த்தியின் செயலால் துவண்டுக் கிடந்த செங்கேணியின்

நிலையை அறிந்து, வாழ்க்கை மீதான நம்பிக்கையைத் தந்து, அவளுடன் சேர்ந்து வாழ முற்படுகிறான், கார்த்தியின் நண்பனாகிய சுதாகர். இவ்விருவரும் திருமணம் செய்து கொண்டு நான்கு குழந்தைகள் பெற்றெடுப்பதாக நாவலில் குறிப்பிடப்படுகிறது.

தொழில் தேடி சுதாகருடன், செங்கேணி புதுச்சேரிக்குத் திரும்பி வருகின்றாள். மீண்டும் இராசாவால் செங்கேணிக்குப் பாலியல் சீண்டல் ஏற்படுகிறது. இதையறிந்து, செங்கேணியின் நடத்தைகளில் நம்பிக்கையில்லாமல், அவளை விட்டு நிரந்தரமாகப் பிரிந்துவிடுகிறான், சுதாகர். ஆதரவற்று நான்கு பிள்ளைகளுடன் துயரப்படும் செங்கேணியைக் கண்டு, அவளின் தாயார் வேணியம்மாள் தன் வீட்டிற்கு அழைத்துச் செல்கிறாள். அங்கும் தன் அண்ணனுடன் ஏற்படும் சண்டையின் காரணமாக, ஊருக்கு வெளியில் தனி வீடெடுத்துக் குழந்தைகளுடன் காலத்தைக் கழிக்கிறாள், செங்கேணி. தாயின் துயரத்தை உணரும் ஒரே ஆண் பிள்ளையான காளிமுத்து, இராஜாராம் என்பவரிடம் சைக்கிள் ஸ்டோரில் வேலைக்குச் சேர்கிறான். செங்கேணியும் கிறித்துவ மடத்தில் பணியாளாகச் சேர்கிறாள். இக்குடும்பத்திற்கு ஆதரவு தருவதாகச் சொல்லி, இராஜாராம் செங்கேணியின் நெருக்கடிகளைத் தனக்குச் சாதகமாக்கிக் கொண்டு, பாலியல் சுரண்டலில் ஈடுபடுகிறான். இராஜாராமுடன் ஏற்பட்ட உறவினால், "சாஜி" என்கிற ஆண் குழந்தையைப் பெற்றெடுக்கிறாள். தன் தாயின் போக்கினை வெறுக்கும் காளிமுத்து, பருவமுதிர்ச்சியடைந்த கொஞ்ச காலத்திற்குள், சென்னைக்கு பெயிண்டிங் வேலைக்குச் செல்கிறான். அங்கு எதிர்பாராதவிதமாக நான்குமாடி கட்டடத்திலிருந்து கீழே விழுந்து இறந்து விடுவதாகக் கதை நகர்கிறது.

பாலியல் ரீதியாகத் தான் தொடர்ந்து சுரண்டப்படுவதையும், அவ்வாறு பழகிய ஆண்களால் கொஞ்ச காலத்திற்குள்ளாகக் கைவிடப்படுவதையும் நினைத்துப் பார்க்கும் செங்கேணி, தன் உடலின் மீதும் வாழ்க்கையின் மீதும் வெறுப்புக் கொள்கிறாள். தனியாளாக வாழ்க்கையின் நெருக்கடிகளைச் சமாளிக்கத் தயராகிறாள். தனக்கு ஏற்பட்ட நெருக்கடிகளைப் போன்று தன் மகள்களுக்கும் ஏற்பட்டுவிடக் கூடாது எனக் கருதியிருக்கிறாள். ஆனால், எதிர்பாராதவிதமாக, அவளின் இரண்டாவது மகள் சுப்புலட்சுமியின் வாழ்க்கையும் திண்டாட்டமாக அமைகிறது. திருமணமாகி வெகுசில காலத்திற்குள்ளாகவே கணவனிடமிருந்து பிரிகிறாள். பிறந்து ஏழு மாதங்களே ஆன ஆண் குழந்தையைக் கணவன் குடும்பத்தினர் பறித்துக் கொண்டு சென்றபின், தனக்கான வாழ்க்கையைக் கேள்விக்குறியாக உணர்கிறாள் சுப்புலட்சுமி. அந்தவேளையில், தன் மகளுக்காகப் பக்கத் துணையாக இருந்து, அவளை மீட்டெடுக்கும் விதமாக நாவலின் கதை விரிகிறது.

செங்கேணி பாத்திரத்தின் மூலம், பெண்களின் வாழ்வில் ஏற்படும் பாலியல் சுரண்டல்களைக் குறிப்பிடும் இந்நாவல், கல்வியறிவு பெற்று, பொருளாதார மேம்பாடு அடையும்போது, எத்தகைய நெருக்கடிகளில் இருந்தும் பெண்கள் தங்களை நிலைநிறுத்திக் கொள்ளமுடியும் என்பதை மையக்கருவாகக் கொண்டு அமைந்துள்ளது. இதற்கு, வேணியம்மாள் - செங்கேணி - சுப்புலட்சுமி ஆகிய மூன்று தலைமுறைகளைச் சேர்ந்த மீனவப் பெண்களின் வாழ்வியலை நாவலின் கதை விவரிக்கிறது. இதனைப் பெண்ணிய நோக்கிலும் அணுக இடமுள்ளது. இனி "செங்கேணி" நாவலில் இடம்பெறும் இனவரைவியல் கூறுகளைக் காண்போம்.

**நில அமைப்பு**

உலகிலுள்ள அனைத்து மக்களும் தத்தம் நில அமைப்புக்கும், காலச் சூழலுக்கும் ஏற்ப வாழ்வியலைக் கொண்டுள்ளனர்.

அதற்கேற்ற வகையிலேயே அவர்களின் தனித்தன்மையான பண்பாடும் கட்டமைக்கப்பட்டுள்ளது. எனவே “வாழிடம்” என்பது இனவரைவியல் கூறின் முக்கிய அங்கமாக விளங்குகிறது.

“செங்கேணி” நாவல் புதுச்சேரி வட்டாரத்தில் உள்ள பட்டணவ மக்களின் வாழ்வியலைக் குறிப்பிடும் களமாக அமைந்துள்ளது. அதிலும் குறிப்பாக, முத்தியால்பேட்டையில் அமைந்துள்ள “சோலைத்தாண்டவன் குப்பம்’ (தற்கால வழக்கில் “சோலைநகர்’ எனக் கூறப்படுகிறது) என்ற கடலோரக் கிராமத்தையே முக்கியக் களமாகக் கொண்டுள்ளது. இடையிடையே சில கடலோர கிராமங்களான, வைத்திக் குப்பம், குறிச்சிக் குப்பம், தாழங்குப்பம் (தாழங்குடா), சொத்திக்குப்பம், (நாகப்பட்டினம், காரைக்கால், அயோத்திக்குப்பம் - சென்னை) போன்றவை குறிப்பிடப்படுகின்றன.

**சுற்றுச்சூழல்**

சுற்றுச் சூழல் எனும் இனவரைவியல் கூறானது, நாவலின் கதைக்கள மாந்தர்களின் இயல்பான வாழிடக் கூறுகளைக் குறிப்பதாகும். “செங்கேணி” நாவல் விவரிக்கும் களம், கடலும் மணலும் சார்ந்த பகுதியாதலால் கடலின் அழகை, அவளுக்கு அதிகாலைப் பொழுதின் வானத்தையும் கடலையும் பார்ப்பது மிகவும் பிடிக்கும். நிலவா, சூரியனா என்று குழம்புவதைப் போல, வட்டமாக அடிவானத்துக்கும் உச்சிக்கும் நடுவில் ஒளிக்கோடுகள் செந்நிறத் தூரிகைகள் யாரோ கை தவறி கலைத்துப் போட்டதைப் போல, இருட்டுக்கும் விடியலுக்கும் நடுவான நேரத்தில் வண்ணம் வண்ணமாக சிவப்பு மஞ்சள் ஆரஞ்சாக சிவந்திருக்கும். நாள்தோறும் விடியற்காலைப் பொழுதில் வானத்தையும் கடலையும் பார்த்தாலும் காவியாவிற்கு அதன்மீது இருக்கின்ற ஆசை குறையாது (செங்கேணி, ப.30) என்று நாவலாசிரியர் காட்சிப்படுத்தியுள்ளதைக் கருத்திற்கொள்ள வேண்டியுள்ளது.

**காலநிலை**

செங்கேணி நாவலானது, ஏறத்தாழ ஐம்பது ஆண்டுக்காலத் தொடர்ச்சியில், மூன்று தலைமுறைகளுக்கிடையே நடைபெறும் நிகழ்வுகளைக் குறிப்பிடுகிறது. மரபு வழிப்பட்ட அறிவியல் சார்ந்த செய்திகளை அறிந்துள்ள மீனவர்கள், அவற்றைத் தங்களின் வாழ்வியலோடு இணைத்துக் கண்டுள்ளனர். பருவக் காலங்கள், காற்றின் திசை, மேகக்கூட்டங்களின் நிறம், கடலில் தென்படும் நீரோட்டங்கள் போன்றவற்றை அடிப்படையாக் கொண்டு மீன்பிடித் தொழில்நுட்பத்தை அமைத்துக் கொண்டுள்ளனர். இக்கூறினை விவரிக்கும் பகுதியாக, நல்ல பருவமாக இருந்ததால் எல்லாரும் செக்கலுக்கு[1] வலை தள்ளிக்கெண்டு போனார்கள். காணாங்கத்தையும் பருவ ஊலாவும் கண்ணுக்கு நாலாக வலையில் அகப்பட்டது. மீனைப் பேர்த்துப் பேர்த்து முடியாமல் ஓய்ந்து போனார்கள். தைப்பெருக்குக்கும் ஆடிப்பெருக்குக்கும் தான் பௌர்ணமி அலையில் மீன்கள் பெருகும். பேந்தவலை[2] (350 கண் வலை) வைத்திருப்பவர்களுக்கு லாட்டரி அடிச்ச மாதிரிதான். மணிவலையில் ஒரு இறால் 200 கிராம் நிக்கும். நாளுக்கு 30 கிலோ இறால் புடிக்கிற வஸ்தாரிகளும் உண்டு. இன்னொரு பக்கம் நெத்திலி மீனை மலைபோல் கொண்டுவந்து குவித்துக் கடற்கரை முழுவதும் தெளிப்பார்கள். (செங்கேணி, ப.63) என்கிற காட்சி அமைந்துள்ளது. தை மாதமும் ஆடி மாதமும் குறிப்பாக, பௌர்ணமி நாளில் சில குறிப்பிட்ட மீன் வகைகளும், இறால் வகைகளும் கிடைக்கும் என்பதை மீனவர் கணித்து வைத்துள்ளனர் என்பது தெளிவாகிறது. நாவலின் மற்றொரு காட்சியில்,

வலையிலே ஒரு மாசி மருவும் இல்ல. வண்டத்தண்ணி[3] ஓட்டம் ஒரே குப்பையும் செத்தையும்தான். பொழுதுபோற வரைக்கும் சிக்கெடுக்க வேண்டியதுதான் (செங்கேணி, ப.63)

என விவரிக்கப்படுகிறது. இதில் "வண்டத்த ண்ணி" என்பது கடல் நீரோட்டத்தின் பெயராகும். இவ்வாறு மீனவர்களின் காலநிலை அறிவியல் நுட்பத்தை அமிர்தவள்ளி எடுத்தியம்பியுள்ளார்.

**உணவுமுறை**

மனிதரின் அடிப்படைத் தேவைகளில் முக்கியத்துவம் பெறுவது உணவாகும். மனிதர்களின் உணவுமுறையானது, அவரவர்களின் இருப்பிடத்தை மையமாகக் கொண்டே அமைகிறது. "செங்கேணி" நாவல் கடலும் கடல் சார்ந்த பகுதியாதலால், பெரும்பாலும் மீன் வகைகள் சார்ந்த உணவுமுறை காணப்படுகிறது. மீன் குழம்பு வைக்கும் முறையும் பிற பகுதியிலிருந்து வேறுபடுகிறது. நாவலில் வெங்காயம், தக்காளி, புளியைக் கரைத்து அதில் மீனைப் போட்டுச் செய்வார்கள் (ப.35) எனும் செய்தி இடம்பெறுகிறது. இது, புதுச்சேரி வட்டாரத்தவர்களின் மீன் குழம்பு செய்முறையாக உள்ளது. நாவலில் ஒரு காட்சியில், செவத்தையார் (செங்கேணியின் தந்தை) என்ற கதாபாத்திரம் தன் மகள் நீலாவிடம், இரவு உணவு உண்பதற்காகக் கேட்கும்பொழுது, நீலா தன் தந்தைக்குக் கடல்சார் உணவினைத் தருகிறாள்.

கொஞ்ச நேரம் பொறுப்பா! கொழம்பு எறக்கப்போறேன். வள்ளிக் கிழங்கும், சென்னாங்குன்னியும் போட்டு பொறியல் செஞ்சிருக்கேன். அதுல சோத்தபோட்டுப் பிரட்டி சாப்பிடறயாப்பா? (செங்கேணி, ப.102) என்கிறாள். இதுபோன்று நாவலில் பல இடங்களில் அவர்களின் உணவுமுறை சார்ந்த குறிப்புகள் காணக்கிடைக்கின்றன.

**தெய்வம்**

"செங்கேணி" நெய்தல் நிலம் சார்ந்த மீனவ மக்களின் வழிபாட்டு அம்மனாகத் திகழ்கிறது. குறிப்பாக, புதுச்சேரி வட்டார மீனவர்களின் காவல் தெய்வமாகவும் விளங்குகிறது. இந்த தெய்வத்தினைப் பற்றி, மாரியம்மனின் அவதாரமாகக் கருதப்படும் செங்கழுநீர் அம்மன் அல்லது செங்கேணி அம்மன் வட தமிழ்நாட்டு மீனவர்களுக்குக் குலதெய்வமாகும். இதற்கு மீனவர்களிடம் ஒரு நாடோடிக் கதையும் உள்ளது. சுமார் நானூறு வருடங்களுக்கு முன் வீரராகவச் செட்டியார் எனும் மீனவர் கடலில் மீன்பிடித்துக் கொண்டிருக்கும்பொழுது அவருடைய வலையில் மீன் எதுவும் அகப்படவில்லை. கடைசியாக, அவர் வீசிய வலையில் ஒரு மரத்தடி மட்டும்தான் கிடைத்தது. அதைக் கொண்டு வந்து வீட்டின் ஓரமாகப் போட்டு வைத்திருந்தார். ஒருநாள் விறகுக்காக அவருடைய மனைவி அத்தடியைக் கோடாரியால் வெட்டியபோது வெட்டுப்பட்ட இடத்திலிருந்து இரத்தம் வழிய ஆரம்பித்தது. இதைக் கண்ட மக்கள் வியப்பில் ஆழ்ந்தனர். வீரராகவச் செட்டியார் இது ஒரு தெய்வச் செயல் எனக் கருதி, அக்கட்டைக்கு மஞ்சள் பூசி சாமி அறையில் வைத்து வணங்கத் தொடங்கினார். அவருடைய கனவில் ரேணுகாதேவி தோன்றி தான் அம்மரக் கட்டையில் குடியிருப்பதாகக்கூறி ஒரு கோவில் கட்டி அதில் அம்மரக்கட்டையை வைத்துச் செங்கழுநீர் அம்மன் என்ற பெயரில் வணங்கச்சொன்னார். அப்பெயரே நாளடைவில் செங்கேணியம்மன் என மருவிற்று. (தமிழக மீனவர் தொழில் பண்பாட்டுச் சொல்லகராதி, ப.துதுதுடிதி)

என்கிற வரலாற்றுக் குறிப்பினை அறிய முடிகிறது. இந்நாவலில், செங்கேணியின் அக்கா சௌந்தரி, செங்கேணிக்கு ஓரிடத்தில் பதில் கடிதம் எழுதும்போது,

அன்புள்ள செங்கேணிக்கு, உன்னை நினைக்க மறக்காமல் இருக்கும் அனைத்துச் சொந்தமும். நீ நல்லா இருக்கணும்னு எப்போதும் மாரியாத்தாகிட்டயும் முனிஸ்வரன்கிட்டயும் வேண்டிக்கிறோம். (செங்கேணி, ப.38) என்று கூறுவதன்மூலம் அவர்களுக்குக்

காவல் தெய்வமாகவும், குல தெய்வமாகவும் செங்கேணி அம்மனும் முனிஸ்வரனும் விளங்குவதை அறியமுடிகிறது. இதில் வரும் மாரியாத்தா செங்கேணி அம்மனின் அவதாரமாக வந்துள்ளதை இங்கு காண முடிகிறது.

## மொழி

ஓர் இனத்தின் அடையாளமாக அந்தந்த வட்டாரங்களில் வழங்கப்படும் மொழியே திகழ்கிறது. குறிப்பிட்ட மக்கள் பிரிவினரின் பேச்சு மொழியையும் அவர்களின் வாழ்வியல் சூழலுடன் பொருந்தும் முறையிலான வருணனைப் படிமங்களையும் தமிழ் இனவரைவியல் நாவல்களில் பயன்படுத்து வதன் அவசியத்தை,

நாவலில் இடம்பெறும் பாத்திரங்களின் சமூக நிலை மற்றும் குணாம்சங்களுக்கேற்பவும் அவை இயங்கும் தளம் மற்றும் சூழலுக்கேற்பவும்அவற்றின்உரையாடலின் உள்ளடக்கமும் மொழிநடையும் அமைவது சிறப்பான ஒன்று (இனவரைவியலும் தமிழ் நாவலும், ப.29) என்கிறார் ஆ.சிவசுப்பிரமணியன். அவ்வகையில், செங்கேணி நாவலில் புதுச்சேரி வட்டார மீனவ மக்களின் மொழியே கையாளப்பட்டுள்ளது. கதாபாத்திரங்களின் உரையாடல்கள் வழியும், அதை ஒட்டி அமையும் பல்வேறு காட்சிகளின் வழியும் அம்மக்களின் மொழிநடையில் விவரித்துச் செல்கின்றார், அமிர்தவள்ளி. இந்நாவலின் ஒரு காட்சி வருமாறு:

“தெ! செத்தம் சும்மா கெட. நீ ஏழு புள்ள பெத்துட்டதால பெரிய வஸ்தாரியா ஆயிடமாட்ட! நான் ஆறு பெத்தேன். குண்டா பத்து பெத்தவ. எல்லாரும் மொதல் புள்ளக்கி இப்படித்தான் அழுதிருப்போம். நீ என்னமோ காட்டாப்பு காட்ற? வலியும் வருத்தமும் அவங்கவங்களுக்கு வந்தால் தான் தெரியும்” (செங்கேணி, ப.51) என்கிற உரையாடலில் அம்மக்களின் இயல்பான மொழி வெளிப்பட்டுள்ளது. அதிலும் குறிப்பாக, வஸ்தாரி (உடல் பலம் கொண்டவர்), காட்டாப்பு (பகட்டு அல்லது பந்தா) போன்ற சொற்கள் அவர்களுக்கே உரித்தான மொழியாக விளங்குகிறது. அதேபோல், கரப்போங்கமா (ப.21) - கரையோரமாக, கசாறு (ப.23) - சிறிய அளவிலான மீன்கள், தொவட்டி (ப.52) - தொட்டு உண்ணுதல், கெளிப்பு (ப.101) - ஆரவாரம், சந்திரியடிக் கிடலாம்னு (ப.106) - மறைத்துவிடல் அல்லது அமைதியாக்கிவிடல், லங்கடா (ப.110) - கத்திப் பேசுதல், சிம்புரான் (ப.119) - இழுக்கிறான், ரவகானு (ப.218) - சிறிய, ரெப்பு (ப.218) - திமிரு போன்ற பல்வேறு வட்டார வழக்குச் சொற்கள் நாவலில் காணப்படுகின்றன.

## தொழில்

மனிதர்களின் தேவையைப் பூர்த்தி செய்துகொள்ள பொருள் அவசியமாகிறது. பொருளைப் பெற அடிப்படையாக இருப்பது, தொழில்கள் ஆகும். மீனவர்கள் பரந்த கடலைத் தம் தொழில் களமாகக் கொண்டு, மீன்பிடித் தொழிலைச் செய்கின்றனர். செங்கேணி நாவலில் புள்ளைச்சாவடியார், கார்த்தி, சுதாகர், இராசா, செல்வநாதன் போன்ற பாத்திரங்கள் மீன்பிடித் தொழிலைச் செய்வதாக நாவலாசிரியர் கூறுகிறார். இளைய தலைமுறையினர் மீன்பிடித் தொழிலைக் கைவிட்டுப் பிற தொழில்களுக்குச் செல்வதைச் செங்கேணி நாவலில்,

குலத்தொழில்தான் தெரியல. பக்கத்துல நடுத்தெரு சிநேகிதக்காரனுங்க கூட சேர்ந்து கம்பி கட்ற வேலைக்கும் செண்டரிங் அடிக்கிற வேலைக்கும் போனார்கள் (செங்கேணி, ப.120) என்றும்,

அவன் இன்னா பட்டணவனுக்குப் பொறந்தவன் மாதிரியா இருக்கிறான்? ஒரு நீக்கு போக்கு தெரியல. கடல்ல நீய தெரியாது. பாவுபட்டறையில நூல் நூக்குற வேலை செய்றான். பேனா கம்பெனியில

இங்கி ஊத்தற வேலைக்குப் போறான். (செங்கேணி, பக்.121-122)

என்று கூறும் புள்ளச்சாவடியார் கூற்றிலிருந்து தனது மச்சான்களின் தொழில் அவர் செய்யும் மீன்பிடித்தொழிலில் இருந்து வேறுபடுவதையும் அவரின் தலைமுறைக்குப் பின்னால் வரும் தலைமுறையினர் வெவ்வேறு தொழில்களுக்குச் செல்வதையும் காட்டுகிறது. அதுமட்டுமல்லாமல், சைக்கிள் ஸ்டோரில் வேலை பார்த்தல், பெயிண்ட் அடிக்கும் வேலை என்று சில தொழில்களும் நாவலில் இடம்பெற்றுள்ளன.

அதேபோல், பெண்களின் தொழில்களே அவ்வின ஆண்களின் பொருளாதாரச் சுமையைக் குறைப்பதாகவும் சுட்டப்பட்டுள்ளது. பெரும்பாலும் இவ்வினத்தின் ஆண்களுடைய பொருளாதார நிலை என்பது அவர்களின் வாழ்வில் சுயமகிழ்ச்சியாக இருப்பதற்கு மட்டுமே பங்காற்றுகிறது. (சான்றாக, சாராயம் (அ)மதுகுடித்தல், பெண்களுடன்இருத்தல்). அதனால், குடும்பப் பொறுப்புகளைச் சுமப்பவர்களாக இந்நாவிலில் மூன்று தலைமுறைப் பெண்களும் உள்ளனர். இதில் வரும் வேணியம்மாள் கதாபாத்திரம் ஆண்களுக்கு இணையாக உழைப்பதை,

அவள் பொம்பளைக்குப் பொம்பளை மட்டும் இல்ல. ஆம்பள மாதிரி குடும்பத்தையே நிருவாகம் பன்றாளே! கவுச்சி வட்டா எடுத்தாவது குடும்பத்த காப்பாத்துவாள் (செங்கேணி, ப.113) என்று வேணியம்மாளின் கணவர் செவத்தையார் கூறுவதிலிருந்து அறிந்துகொள்ள முடிகிறது. வேணியம்மாள் மீன் விற்கும் தொழில் செய்வது இங்கு தெரியவருகிறது. அதே போல், தறி நெய்தல், மீன் விற்க, எடுத்துவர மார்க்கெட்டுக்குச் செல்லுதல், மடத்தில் வேலை செய்தல், வீடுகளில் வேலை பார்த்தல் போன்ற தொழில்களையும் மீனவப் பெண்கள் செய்கிறார்கள் என்பதை நாவலின் மூலம் அறிந்துகொள்ள முடிகிறது.

**தொழிற்கருவிகள்**

செங்கேணி நாவலில் வலை, கொடிவலை[4], கரைவலை[5], தாவு, தண்டு[6], சொம்புக் கட்டை, கயிறு போன்ற தொழிற்கருவிகள் ஆங்காங்கே சுட்டப் பெற்றுள்ளன.

**நம்பிக்கை**

ஒவ்வொரு இனத்தவரிடமும் பல்வேறு வகையான நம்பிக்கை முறைகளும், பழக்கவழக்கங்களும் காணப்படுகின்றன. அவ்வகையில், பரதவ இன மக்களின் நம்பிக்கைகளை இந்நாவலில் காணமுடிகிறது. மீனவர்கள் (ஆண்கள்) மீன்பிடிக்கச் செல்லும் போது, பெண்கள் எதிர்படக் கூடாது எனும் வழக்கம் இருந்துவருவதை அமிர்தவள்ளி பதிவு செய்துள்ளார். அக்காட்சி வருமாறு:

காவியா! சாமத்துல நடுராத்திரியில ஒன்னுக்கு ரெண்டுக்குப் போறதா இருந்தா வழியில வாட்டையில யாராவது ஆம்பளைங்க வலவாரு தள்ள தாவுதண்டு எடுத்துனு போறப்ப எதிர்ல போவாத! பறி ரொம்ப மீன் பட்டுச்சினா வந்து வாழ்த்த மாட்டாங்க. நம்ப போதாத நேரம் மாசி மருவு இல்லனா வலைக்குப் போறப்ப இன்னார்தான் எதிர்க்க வந்தாங்க. கஞ்சி காய்ச்ச கூட வழியில்லனு சொல்லுவாங்க (செங்கேணி, ப.18) என்று காவியாவின் தாயார் பாத்திரம் உரைப்பதின் வாயிலாக, மீன்பிடித் தொழில் சார்ந்த நம்பிக்கையை அறிந்துகொள்ள முடிகிறது. மேலும், "நாய் தங்களை நோக்கி வந்தால், தங்களின் மேல்சட்டையைத் தூக்கிவிட்டு அடிவயிற்றிலும் கைகளிலும் சொரிந்துகொண்டால், நாய்க்கும் வயிறு வலிக்கும்" (செங்கேணி, ப.19) என்கிற குழந்தைத்தனமான நம்பிக்கை மீனவக் குழந்தைகளிடம் காணப்படுவதையும் நாவலாசிரியர் குறிப்பிட்டுச் செல்கிறார்.

**உறவுமுறை**

தனிமனிதர்களைச் சமூகக் குழுக்களாக ஒழுங்குபடுத்துவதற்கு "உறவுமுறை"யே காரணமாக விளங்குகிறது. உறவுமுறைகள் எல்லாச் சமூகங்களிலும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. வெவ்வேறு சமூகத்தின் (அ) இனத்தின் பண்பாட்டுச் சூழலுக்கு ஏற்ப மாறுபாடு அடைகிறது. செங்கேணி நாவலில் இம்மாறுபாடு இரண்டு தலைமுறைகள் இடையே காணப்படுகின்றது. செங்கேணியின் தலைமுறையில், அம்மாவின் தங்கை முறையைக் குறிக்க "தொத்தா" (ப.174) என்ற சொல்லும், காவியாவின் தலைமுறையில் "சித்தி" (ப.15) என்ற சொல்லும் வழங்கப்படுகிறது. மேலும், வட தமிழக கடற்கரை மீனவப் பகுதிகளில் இன்றும் "அம்மாவின் தங்கை" உறவுமுறையைத் "தொத்தா" என்று அழைக்கும் வழக்கம் புழக்கத்தில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

**மருத்துவமுறை**

மக்கள் தங்களது நோய்களுக்காகத் தாங்களாகவே மேற்கொள்ளும் மருத்துவ முறைகள் நாட்டுப்புற மருத்துவம் என்றும் கைவைத்தியம் என்றும் வழங்கப்படுகிறது. இத்தகைய மருத்துவ முறைகளை மேற்கொள்ளும் மக்கள் தங்கள் வாழிடங்களில் கிடைக்கும் மூலிகைகள், இயற்கைப் பொருட்கள் மட்டுமன்றி நம்பிக்கை சார்ந்த பொருட்களையும் பயன்படுத்துகின்றனர். அவ்வகையில், நெய்தல் நில மக்கள் தங்கள் உடலில் ஏதேனும் வீக்கம் ஏற்பட்டால், கடல் மணலை அள்ளி வந்து, வறுத்து ஒத்தடம் கொடுக்கும் செய்தி (செங்கேணி, ப.123) இந்நாவலில் சுட்டப்பட்டுள்ளது.

பாலூட்டும் பெண்களுக்குப் பால் பெருக, "சுதுப்பணான் காரை" மீனைக் குழம்பு வைத்துக் கொடுக்கும் வழக்கம் உள்ளதை,

*நீலா, எங்கருக்க? இந்தா சுதுப்பணான் கார. மொளவு பூண்டு அரச்சி ஊத்தி, கொழம்பு வச்சிக்குடு*

*தெ! மீன இங்கக் கொண்டா! புள்ள பெத்தவளுக்கு மருந்து செலவுத் தூள் அரச்சி வச்சிருக்கேன். கைப்புடி பூண்டும் கத்திரிக்காயும் வதக்கிப்போட்டு வச்சால் புள்ளைக்குப் பால் கணமா கெடைக்கும் (செங்கேணி, ப.61)*

என்ற கூற்றிலிருந்து அறிய முடிகிறது. இவ்வாறாக, இன்னும் பல்வேறு இனவரைவியல் கூறுகளை இனங்காண்பதற்கான களமாகச் "செங்கேணி" நாவல் அமைந்துள்ளது. மேலும், இந்நாவலில் விவரிக்கப்படும் மீனவ மக்களின் புனைவாக்க வாழ்வியலுக்கும் அம்மக்களின் யதார்த்தமான அன்றாட வாழ்வியலுக்கும் நெருங்கிய தொடர்பிருப்பதையும் இவற்றின்மூலம் அறிந்துகொள்ள முடிகிறது.

**முடிவுரை**

மனிதர்களுடைய வாழ்வியலானது அவர்களைச் சுற்றியுள்ள நிலவியலையும் சூழலியலையும் சார்ந்ததாக உள்ளது. இவற்றிலிருந்து அவர்தம் பழக்க வழக்கங்களும் மொழியும் பண்பாடாகப் பரிணமிக்கின்றன. அவ்வகையில், 'செங்கேணி' நாவலில் பதிவாகியுள்ள புதுச்சேரி வட்டாரப் பரதவர் இனத்தின் ஒரு பிரிவினராக உள்ள "பட்டணவ" மக்களின் வாழ்வியலை, இனவரைவியல் கூறுகள் அடிப்படையில், இக்கட்டுரையின் வாயிலாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது. இதன்மூலம், மீனவ மக்களிடையே காணப்படும் தனித்துவமான மொழி, உணவு சார் பண்பாட்டு நடத்தைகளை அறிந்துகொள்ளமுடிகிறது. சமூகப் பொருளாதாரம் சார்ந்த தேவைகளால், மீனவ மக்கள் தங்களின் வாழ்வாதாரத்தை இழந்து, நகரம் சார்ந்த கூலி வேலைகளுக்குச் செல்வதையும் தெரிந்துகொள்ள முடிகிறது. செங்கேணி எனும் பெண்ணின் வாழ்க்கையை மையமிட்டு எழுதப்பட்டுள்ள இந்நாவலில், செங்கேணிக்கு முன், பின்னான தலைமுறைகளையும் இணைத்து

விவரிக்கப்படுள்ளமைக் குறிப்பிடத்தக்கது. செங்கேணி எடுக்கும் காத்திரமான முடிவுகளில் அவ்வினப் பெண்களின் போராட்ட வாழ்வு உள்ளடங்கியருப்பதை உணரமுடிகிறது. ஒட்டுமொத்தத்தில், ப.அமிர்தவள்ளியின் "செங்கேணி" நாவலானது, நெய்தல் நிலம் சார்ந்த இனவரைவியல் கூறுகள் செறிந்த தேர்ந்த பெண்ணெழுத்தாக விளங்குகிறது.

அகராதிக் குறிப்புகள் (Lexicographic references)

1. செக்கல் - மாலையில் செல்லும் மடி (நெய்தல் சொல்லகராதி, ப.76)
2. பேந்த வலை - 350 கண் வலை - கண்கள் சிறியனவாகப் பின்னிய வலை (த.மீ.தொ.ப.சொ.அகராதி, ப.296)
3. வண்டத்தண்ணி - சித்திரை மாதத்தில் வண்டல் கலந்தது போன்று புளியங்கொட்டைச் சாறு நிறத்தில் இருக்கும்' (த.மீ.தொ.ப.சொ.அகராதி, ப.402)
4. கொடிவலை - கடலில் பிடித்த மீன்களை மொத்தமாகக் கட்டுவதற்குப் பயன்படும் ஒருவகை வலை (த.மீ.தொ.ப.சொ. அகராதி, ப.285)
5. கரைவலை - நுட்பமான துவாரங்கள் பொருந்திய ஒரு பையைத் தன்னகத்தே கொண்ட, கரையிலிருந்து அரைமைல் தூரம் வட்டமாக வீசி மீன்களைத் துரத்திப் பிடிக்க உதவும் ஒரு வகை வலை. (த.மீ.தொ.ப.சொ.அகராதி, ப.282)
6. தண்டு - துடுப்பு (கடலோரச் சொல்லகராதி, ப.201)

**துணைநூற் பட்டியல்**


1. அமிர்தவள்ளி.ப., செங்கேணி, முரண்களரி படைப்பகம், மணலி, சென்னை, 2021.
2. சந்திரகுமார். இரா. (மு.ப.ஆ.), ஏழுமலை.சு. (ப.ஆ.), தமிழக மீனவர் தொழில் - பண்பாட்டுச் சொல்லகராதி, செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை, 2023.
3. சிவசுப்பிரமணியன். ஆ., இனவரைவியலும் தமிழ் நாவலும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், அம்பத்தூர், சென்னை, 2019.
4. தனஞ்செயன்.ஆ., தமிழில் இலக்கிய மானிடவியல், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2014.
5. பக்தவத்சலபாரதி, இலக்கிய மானிடவியல், அடையாளம், புத்தாநத்தம், திருச்சி, 2014.
6. பரமசிவம். அரு., பரதவம், பரதவர் இனவரைவியல், காவ்யா, சென்னை, 2014.
7. பெர்லின். குறும்பனை சி., நெய்தல் சொல்லகராதி, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், அம்பத்தூர், சென்னை, 2020.
8. பெர்லின். குறும்பனை சி., கடலோரச் சொல்லகராதி, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், அம்பத்தூர், சென்னை, 2024.